**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

*******************

**ஊடக அறிக்கை**

**பௌத்த தத்துவம் மற்றும் நற்பண்புகளை வளர்த்தலில் அதன் பங்களிப்பு குறித்த மூன்று நாள் சர்வதேசமாநாடு,**

**2021 பெப்ரவரி 17 முதல் 19 வரை**

இந்திய கலாசார உறவுகள் பேரவை மற்றும் ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் அபிவிருத்தி நிறுவனம் ஆகியவை ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த "பௌத்த தத்துவம் மற்றும் இளைஞர்களிடையே நற்பண்புகளை வளர்ப்பதில் அதன் பங்கு" குறித்த மூன்று நாள் சர்வதேச மாநாடு, பெப்ரவரி 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை மெய்நிகர் மார்க்கம் ஊடாக நடைபெற்றது . இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு , சிறுபான்மை விவகாரங்கள் மற்றும் ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்த மற்றும் ஹோமியோபதி (ஆயுஷ்) அமைச்சர் கௌரவ ஸ்ரீ கீரென் ரிஜு இந்த மாநாட்டினை ஆரம்பித்து வைத்தார் . பௌத்த தத்துவத்தின் முக்கிய பெறுமானங்கள், அதன் கலாசாரம் மற்றும் , இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் வலுவான கலாசாரத்தின் சிகரமாக அதன் தார்மீக மற்றும் கொள்கை ரீதியான பண்புகளில் இன்றைய இளைஞர்களை ஈர்ப்பதன் பொருத்தப்பாடு ஆகியவற்றினை

வியாபிக்கச்செய்தல் போன்றவற்றை இலக்காக கொண்டு இந்த மாநாடு எற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் இலங்கை உட்பட 29 நாடுகளைச் சேர்ந்த வளவாளர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொள்கின்றனர்.

கௌரவ அமைச்சர் தனது ஆரம்ப உரையில் , 2030 காலப்பகுதியில் உலகளவில் இளைஞர்களை அதிகம் கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தியா இருக்கும் என்றும் இந்திய இளைஞர்களின் அபிவிருத்தியில் முன்னுரிமைக்குரிய விடயமாக இளைஞர்களிடையே தேசிய மற்றும் காலத்துக்கு பொருந்திய பண்புகளை வளர்த்தல் அமையும் என்றும் குறிப்பிட்டார் . மூன்று பிரபஞ்ச உண்மைகள், நான்கு மறை பொருட்கள், பஞ்ச சீலங்கள் மற்றும் பௌத்த தர்மத்திற்கான எட்டு உண்மை வழிகள் ஆகிய விடயங்கள் குறித்தும் குறிப்பிட்ட அவர், உலக அமைதிக்கான சிறந்த அடித்தளமாக இருக்கும் அதேநேரம் , இயற்கை வளங்களை சமமாகப் பயன்படுத்துவதற்கும், சுற்றுச்சூழலை சரியான முறையில் கவனிப்பதற்கும் உலக சமாதானத்துக்கும் இவை சிறந்த மூலாதாரம் எனவும் குறிப்பிட்டார் . இந்த ஆரம்ப அமர்வில் ஐ .சி.சி.ஆர் இயக்குநர் நாயகம் , மற்றும் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சின் மூத்த அதிகாரிகள் உரையாற்றினர்.

இந்த ஆரம்ப அமர்வைத் தொடர்ந்து இலங்கையின் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பாளி மற்றும் பௌத்த கற்கைகள் ஆய்வுகள் துறையின்

வணக்கத்துக்குரிய கதரே சந்தானந்த தே ரர் அவர்கள் “நேர்மறையான மன ஆரோக்கியத்தின் பின்னால் பௌத்த தத்துவத்தின் பங்கு” என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். இவர் ஒரு சிறந்த கல்வியாளர் என்பதுடன் இந்த விடயம் குறித்த ஆழமான அறிவைக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் . தற்போதைய யுகத்தில் மிகவும் பொருத்தமான ஒரு தலைப்பில் அவர் உரை நிகழ்த்தியதுடன் அவரது உரையினை, பங்கேற்பாளர்கள் அனைவரும் பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாநாட்டின் 2 ஆம் 3 ஆம் நாட்களில் பௌத்தம் தொடர்பான பல்வேறு தலைப்புக்களில் பிற புகழ்பெற்ற பிரமுகர்கள் உரை நிகழ்த்தியிருந்தனர் . களனி பல்கலைக் கழகத்தின் பௌத்த கற்கைகள் மற்றும் பாளி திணைக்களத்தை சார்ந்த டாக்டர் ராஜித பி குமார அவர்கள், அறிவுசார் அபிவிருத்தியின் ஆரம்பகால பௌத்த கோட்பாடு மற்றும் தனிநபர் மீதான அதன் செல்வாக்கு” தொடர்பாகவும் ‘இலங்கை இளைஞர்களிடையே பௌத்த தத்துவத்தின் தாக்கம்’ குறித்து புஸ்ஸல்ல வினீதா தேரர் அவர்களும் உரை நிகழ்த்தினர்.

பௌத்த மதத்தின் பகிரப்பட்ட பாரம்பரியம் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான மற்றும் மிகவும் உறுதியான பிணைப்புக்களில் ஒன்றாகும். பௌத்தத் துறையில் நமது இரு நாடுகளுக்கிடையேயான மக்கள்-மக்கள் தொடர்புகளை மேலும் ஆழமாக்கும் பொருட்டு , பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் செப்டம்பர் 2020 இல் நடைபெற்ற மெய்நிகர் இருதரப்பு மாநாட்டின் போது , இரு நாடுகளிடையிலான பௌத்த உறவை மேம்படுத்துவதற்காக 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி உதவியினை அறிவித்தார். இதனை அமுலாக்குவது தொடர்பாக அரச மற்றும் பிற தொடர்புடைய பங்குதாரர்களுடன் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**************

கொழும்பு

18 பெப்ரவரி 2021